## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



காசிபாளையம் பேரூர், ஈரோடு வடக்கு மாவட்டம்.



க.பரமத்தி வடக்கு ஒன்றியம், கரூர் மாவட்டம்.



திண்டுக்கல் பகுதி-2, திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



சரவணம்பட்டி பகுதி, கோவை வடக்கு மாவட்டம்.



அண்ணா நகர் பகுதி, கோவை மாநகர் மாவட்டம்.



சூலூர் தெற்கு ஒன்றியம், கோவை தெற்கு மாவட்டம்.



கோட்டூர் தெற்கு ஒன்றியம், திருவாரூர் மாவட்டம்.



செந்துறை வடக்கு ஒன்றியம், அரியலூர் மாவட்டம்.



திருவட்டார் தெற்கு ஒன்றியம், கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்.



களம்பூர் பேரூர், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



செங்கம் கிழக்கு ஒன்றியம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.

# திருவேற்காட்டில் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்'!

## அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தொடங்கி வைத்து ரேசன் பொருட்கள் வழங்கினார்!

திருவள்ளூர் ஆக. 13;

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள், இதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டத்தில், திருவேற்காடு நகராட்சி வடக்கு மாடவீதி, கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் இத்திட்டத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்.

அருகே உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை நேரடியாக சென்று வழங்கினார்

அப்போது அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை" வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளின் இல்லத்திற்கே சென்று குடிமை பொருட்கள் வழங்கும் திட்டத்தினை தாயுள்ளத்ததோடு, 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட குடும்ப அட்டைதாரர்கள். 18 வயதிற்குட்பட்டவர்களையும், 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களையும் கொண்ட குடும்ப அட்டைதாரர்கள் ஒரு நபர் மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்ப அட்டைதாரர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்ப அட்டைதாரர்கள், மூன்றாம் நபரின் உதவி தேவைப்படும் குடும்ப அட்டைதாரர்கள் மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். தமிழ்நாடில் இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,909 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளும் என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் 1102 நியாய விலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 37,990 குடும்ப அட்டைகளில் உள்ள 47,193 பயனாளர்களும், 3,441 குடும்ப அட்டைகளில் உள்ள 4,660 மாற்றுத்தினாளிகளும், என மொத்தம் 41,431 குடும்ப அட்டைகளில் உள்ள 51,853 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக நியாய விலைக்கடைகளை குழுக்களாக பிரிக்கப்பட்டு நகர்புற பகுதியில் செயல்படும் 124 நியாயவிலைக்கடைகளை ஒருங்கிணைத்து 80 குழுக்களாகவும் (Clusters) கிராமப்புற பகுதியில் செயல்படும் 978 நியாய விலைக்கடைகளை ஒருங்கிணைத்து 474 குழுக்களாகவும் (Clusters) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கடைகள் செயல்பட ஏதுவாக ஊரகப்பகுதியில் 567 வாகனங்கள் மற்றும் நகர்பகுதியில் 111 வாகனங்கள் என ஆக மொத்தம் 678 வாகனங்கள் மூலமாக குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்யப்படவுள்ளது என அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறினார்.

உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருவேற்காடு நகர் மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், நகர் மன்ற துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சண்முகவள்ளி, துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) பாலாஜி, கூட்டுறவு சார் பதிவாளர்கள் கலைவாணி, மேகநாதன், நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.சங்கர், ஏ.ஜெ.பவுல், பி.வி.கே.கண்ணன், டி.வி.இளங்கோவன், சத்தியகிரி, எம். காந்தி, காஞ்சனா இளையராஜா, பெஞ்சமின் , ஜெ.சரவணன், பானு அரசு நடராஜ், ஐ.ஜேக்கப், சாந்தி ராஜா தெய்வசிகாமணி, மனோகரன் துரை கோபால், பி. உமாபதி , சாது, பிரதானம், கே.பி.எஸ். சுதாகர், குமார், ஜெகன், என். ராஜ், ஆசை தம்பி, அப்பு(எ) ஜெபராஜ், ஆ.நாராயணன், நரேஷ், குடியரசன், பேபிஸ்ரீ, அமலேஸ்வரி மற்றும் மேட்டுப்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயலாளர், விற்பனையாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.8.2025) மாநில, தேசிய அளவிலான பாரா தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற லோகேஷ்க்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ், 7,20,000 ரூபாய் மதிப்பிலான உயர்ரக பாரா தடகள உபகரணத்தை (கார்பன் பிளேடு ரன்னர்) வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.